அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006.

அரசுப் பொதுத் தேர்வு மேல்நிலை இரண்டாம் ஆண்டு –மே 2022

பாடம் : அரசியல் அறிவியல்

**20 x1 = 20**

## பகுதி – I / PART - I

1. அ – 1969
2. ஆ – உறுப்பு 333 ஒரு உறுப்பினர்
3. ஈ – மாநிலங்களவை
4. ஈ – குடியரசுத் தலைவரால்
5. ஈ – நாடாளுமன்றத்தின் இரு அவைகள்
6. இ – கலை, இலக்கியம், சமூக சேவை போன்றவற்றில் சிறந்து விளங்குபவர்கள்
7. அ – நீதித்துறை
8. ஆ – 1937
9. ஆ – மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் சிக்கல்கள்
10. அ – அதிகாரப் பகிர்வு
11. இ – இந்திய பொருளாதாரப் பணி
12. ஆ – 1926
13. அ – அமைச்சரவை
14. ஈ – ஜூன் – 1
15. ஈ – ஆனந்த் – குஜராத்
16. ஆ – பண்டித ஜவஹர்லால் நேரு
17. ஈ – கிழக்கு நோக்கி கொள்கை
18. அ – 1 (III) 2 (I) 3 (IV) 4 (II)
19. ஈ – 1945
20. ஆ – கொச்சின் சர்வதேச விமான நிலையம்.

## பகுதி – II

7 x 2 = 14

21. i) தமிழ் நாடு மாநில சட்டமன்றம் 234 உறுப்பினர்களைக் கொண்டது.

ii) 189 உறுப்பினர்கள் பொது தொகுதியிலிருந்து 45 உறுப்பினர்கள் தனித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

iii) ஆங்கிலோ – இந்திய பிரதிநிதி ஒருவர் – ஆளுநரால் நியமிக்கப்படுவார்.

22. மாநிலங்களவை அல்லது மேலவை இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டாவது ஆட்சி மன்றம் என்று அழைக்கப்படுகின்றது.

23. i) இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்.

ii) 35 வயது நிறைவு செய்து இருக்க வேண்டும்.

iii) அரசாங்கத்தில் ஊதியம் பெறும் பதவியில் இருக்கக் கூடாது.

24. i) நிர்வாக செயல்முறைகளை ஆளுகை செய்திட உதவும் சட்டம்.

ii) இது நிர்வாக அமைப்பு, அதிகாரம், அதிகாரிகளின் கடமைகளைத் தீர்மானிக்கிறது.

25. i) 1966 ஆம் ஆண்டு மொரார்ஜி தேசாய் தலைமையில் ஒரு குழுவும், 2005 ஆம் ஆண்டு வீரப்ப மொய்லி தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டன.

ii) மத்திய–மாநில நிர்வாக உறவுகள் குறித்து பரிந்துரை செய்தன.

26. i) ஒரு நிறுவனத்துக்குத் தேவையான பணியாளர்களைத் தேர்வு செய்து அனுப்புவது

ii) நிறுவனத்தில் பணியாளர்களிடையே ஆக்கப்பூர்வமான உறவுகளை வளர்த்தல்.

27. i) மத்திய அரசு ஒருவருடத்திற்கு எவ்வளவு வருமானம் வரும் – என்ன என்ன செலவுகள் செய்ய உள்ளோம் என்பதை தோராயமாக மதிப்பீடு தயாரிக்கும் அறிக்கையே நிதி முன் வரைவு.

ii) நிதி முன் வரைவு மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும்.

**28.** தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் தாராளவாத கொள்கைகளையும் சமுதாயத்தை பாதுகாக்கும் பொதுத்துறை நிறுவனங்களையும் ஊக்கப்படுத்துவதே கலப்பு பொருளாதாரம்.

**29.** வெளிநாட்டில் வாழும் இந்தியர்களை மூன்று வகையில் அடக்கலாம்.

i) ஒரு காரணத்தின் அடிப்படையில் வெளிநாட்டில் நீண்டகாலம் வசிப்போர்

ii) வெளி நாட்டுக் குடியுரிமைப் பெற்று நிரந்தரமாக தங்கி வசிப்போர்

iii) இந்தியர் என்பதற்கான ஆதாரம் இல்லாத, அரசற்ற இந்திய வம்சா வழியினர்.

**30.** i) பாகுபாடாக நடத்தப் படுதல் மற்றும் அமைப்பு ரீதியான வன்முறை.

ii) பூர்விக நிலப் பகுதிகளில் இருந்து பலவந்தமாக அகற்றப்படுதல்

iii) பாரம்பரிய மூல வளங்களை அணுகும் உரிமை மறுப்பு.

iv) சுயாட்சி மற்றும் சுய நிர்ணயம் கேள்விக்குறியாக உள்ளது.

## பகுதி – III

7 x 3 = 21

**31.** i) இந்திய அரசமைப்பானது மக்கள் பிரதிநிதிகளாகக் கொண்ட அரசியல் நிர்ணய சபையால் உருவாக்கப்பட்ட சட்ட பூர்வமான அமைப்பாகும். இதன் முதல் கூட்டம் 1946 டிசம்பர் 9 அன்று புது தில்லியில் கூடியது.

ii) நிர்ணய சபை உறுப்பினர்களால் எழுதப்பட்டு 284 உறுப்பினர்கள் 26.11.1949 அன்று அரசமைப்பினை ஏற்று கையொப்பமிட்டு அரசமைப்பு சட்டத்தை நிறைவேற்றினார்.

**32.** i) தனிப் பெரும்பான்மை

ii) சிறப்புப் பெரும்பான்மை

iii) சரிபாதி மாநிலச் சட்டமன்றங்களால் ஏற்புறுதி செய்தல்.

**33.** i) ஆளுநர் இந்தியக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்.

ii) அவரது பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

iii) இந்திய கூட்டாட்சி முறையில் மாநிலத்தின் அரசியலமைப்புத் தலைவர், மத்திய அரசின் பிரதிநிதி ஆகிய இரட்டைத் தன்மையான பங்கினை ஆளுநர் பெற்றுள்ளார்.

**34.** தனி நபர்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு இந்திய அரசமைப்பு வழங்கியுள்ள அதிகாரமே நீதிமன்ற சீராய்வு அதிகாரம் எனப்படும்.

**35.** i) **1994** S.R. பொம்மை வழக்கில் தான் முகவுரை என்பது அரசமைப்பின் ஒரு பகுதி என உச்சநீதிமன்றம் தன் தீர்ப்பில் குறிப்பிட்டது.

ii) **356 –** பொருளாதார நெருக்கடி காரணமாக S.R. பொம்மை அவர்களின் முதல்வர் பதவி பறிக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியை அமுல் படுத்தியது.

**36.** i) இந்தியக் காப்பீடு மற்றும் ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி முகமை. (IRDA)

II) இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI)

iii) இந்திய போட்டிகள் ஆணையம் (CCI)

iv) ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சிஆணையம் (PFRDA)

v) இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI)

**37.** i) S.K. தர் தலைமையில் மொழி வாரி மாகான அமைப்புக்கான நடைமுறை குறித்து மதிப்பீடு செய்யப்பட்டது.

ii) தேசிய ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்பதாலும் நிர்வாக சிக்கல் ஏற்படும் என்பதாலும் இவ்வாணையம் ஆதரிக்கவில்லை.

**38.** i) திட்டங்களை நடைமுறை படுத்துதல் மக்களின் பங்கை உறுதி செய்வது.

ii) திட்டங்களை நடைமுறை படுத்துவதை சீராய்வு செய்தல் மற்றும் வளர்ச்சிக்கு குறித்து எழும் பிரச்சனைகளை விவாதித்தல்.

**39.** i) தெற்காசிய மண்டல கூட்டமைப்பு, தெற்காசியாவில் அமைந்துள் நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பை பலப்படுத்தி உருவாக்கிய அமைப்பு.

**40.** ஒரு வருடத்தில் நாடாளுமன்றம் மூன்று கூட்டத் தொடர்களை நடத்துகிறது.

i) நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தொடர் (பிப்ரவரி – மே)

ii) மழைக்காலக் கூட்டத் தொடர் ( ஜூலை – ஆகஸ்ட்)

iii) குளிர்காலக் கூட்டத்தொடர் (நவம்பர் – டிசம்பர்)

## பகுதி – IV

7 x 5 = 35

**41.** அ) இந்திய அரசமைப்பு கீழ்கண்ட நாடுகளின் அரசமைப்பிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டன

| நாடு | அரசமைப்பு |
|---|---|
| பிரிட்டன் | நாடாளுமன்ற அரசு ஒற்றைக் குடியுரிமை சட்டத்தின் ஆட்சி. |
| அமெரிக்கா | அடிப்படை உரிமைகள் நீதிமறு ஆய்வு |
| அயர்லாந்து | அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் |
| கனடா | கூட்டாட்சி மத்திய மாநில அரசுகளின் அதிகாரங்கள் |
| ஆஸ்திரேலியா | வணிகம், நாடாளுமன்ற ஈரவைகளின் கூட்டுக் கூட்டம் |
| ஜெர்மனி | நெருக்கடி நிலை காலம் |
| சோவியத் யூனியன் | அடிப்படை கடமைகள் நீதியின் மாண்புகள் |
| பிரான்சு | குடியரசு, முகப்புரையில் சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம் |
| தென் ஆப்ரிக்கா | அரசமைப்பு திருத்தச்சட்டம் செயல்முறை மாநிலங்களவை, உறுப்பினர்களின் தேர்வு. |

41. ஆ)

- உற்பத்தியை அதிகரிப்பது மட்டுமின்றி வேறுபாடுகளைக் களைவதில் ஏற்பட்ட சவால்கள்
- அரசியல் ரீதியான சவால்கள், மத்திய மாநில உறவுகளில் ஏற்பட்ட அதிகாரப் பகிர்வு மற்றும் நிதி பங்கீட்டில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகள்.
- சமூக சவால்கள் இந்தியாவின் பொது உடல் நல ஆரோக்கிய திட்டம் மூலம் கணக்கிடப்பட்ட குழந்தை இறப்பு விகிதம் குறைவடைந்துள்ளது.
- பொருளாதார சவால்கள், இந்தியாவில் தாராளமயமாதல், தனியார் மயமாதல், உலகமயமாதலினால் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்துள்ளன.
- வகுப்புவாதம் சாதி மற்றும் பால் பாகுபாட்டினால் உருவான சவால்கள்.

42. ஆ)

- பாகுபாடாக நடத்தப்படுதல் மற்றும் அமைப்பு ரீதியான வன்முறை.
- பாரம்பரிய கலைகள் மற்றும் புனைவுகள் போன்ற அறிவுச் செல்வங்கள் சுரண்டப்படுதல்
- பூர்விக நிலப்பகுதிகளில் இருந்து பலவந்தமாக அகற்றப்படுதல்.
- பாரம்பரிய மூலவளங்களை அணுகும் உரிமை மறுப்பு
- அழிவை நோக்கிய வளர்ச்சியும் கட்டாய இட மாற்றமும்
- சுயாட்சி மற்றும் சுய நிர்ணயம் கேள்விக்குறியாக உள்ளது.

42 ஆ)

நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றும் போது இரண்டு விதமான நிலைகளைக் கடந்து இரண்டு அவைகளிலும் விவாதிக்கப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டு ஒப்புதலை பெற்றிருக்க வேண்டும்

- முதல் நிலையில் சட்ட முன் வரைவானது ஏதாவது ஒரு அவையில் அறிமுகப்படுத்தப்படுகிறது.
- அங்கு சட்ட முன் வரைவு வாசிக்கப்படுகிறது.
- முன் வரைவு சமர்ப்பிக்கப்பட்ட பிறகு இந்திய அரசிதழில் பிரசுரிக்கப்படும்.
- முன் வரைவின் முதல் வாசிப்பிற்குப்பின் இரண்டு நாள் கால இடைவெளிக்குப் பிறகு இரண்டாவது வாசிப்பு நடைபெறும்.
- மூன்றாவது வாசிப்பிற்குப் பின் ஏதாவது ஒரு அவையில் அந்த முன் வரைவு ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு அடுத்த அவைக்கு மாற்றப்பட்டு அனைத்து நிலைகளையும் கடந்து செல்லும்.
- பின்னர் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று சட்டமாக்கப்படும்.

43 அ)

- கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தியில் உருவாக்கப்பட்ட ஒரு புரட்சியே வெண்மைப்புரட்சி ஆகும்.
- இந்தியாவில் பால் உற்பத்தி 40 ஆண்டுகளில் இருபது மில்லியன் மெட்ரிக் டன் என்ற அளவிலிருந்து 100 மில்லியன் மெட்ரிக் டன் என்ற அளவிற்கு உயர்ந்தது.
- இதன் காரணமாக உலகின் மிகப் பெரிய பால் உற்பத்தி நாடாக இந்தியா வளர்ந்துள்ளது.
- இந்திய கால்நடை வளர்ப்பவர்களிடையே பசு, எருமை போன்ற பால் மாடுகளை வளர்ப்பதில் ஆர்வம் ஏற்பட்டதால் தற்போது 50 கோடி பால் மாடுகள் உள்ளன.
- இதன் மூலம் உலகின் மிகப்பெரிய பால்மாடுகள் வளர்ப்பு நாடாக இந்தியா திகழ்கிறது.
- இந்தியாவில் 22 மாநிலங்களில் 180 மாவட்டங்களில் 1 இலட்சத்து 25000 கிராமங்களில் பால் கூட்டுறவு இயக்கம் உள்ளன.
- வெண்மைப் புரட்சியின் தலைவர் வர்கீஸ் குரியன் ஆவார்.

43. ஆ)

- நாடாளுமன்றம், தேசிய சட்டமன்றம் என்று கூறப்படுகிறது.
- அதுவே முடிவுகளை எடுக்கக் கூடிய உச்ச அமைப்பு மற்றும் மக்களாட்சியின் அடையாளம்.
- நாட்டிற்கும் மக்களின் நலன் சார்ந்த பிரச்சனைகள் மீதான விவரதத்திற்கும் அரசியல் அமைப்பில் சட்டங்களை இயற்றுவதற்கும் திருத்துவதற்கும் கடமைப்பட்டது.
- நாடாளுமன்றத்திற்கு சட்ட அதிகாரம் மற்றும் நிதி அதிகாரம் என்ற இரு முக்கியமான அதிகாரங்கள் உள்ளன.
- சட்ட அதிகாரங்கள் சட்டம் இயற்றவும், நிதி அதிகாரங்கள் நிதி சம்மந்தப்பட்ட நிதி நிலை அறிக்கை கணக்குகளை தயார் செய்யவும் கடமைப்பட்டுள்ளது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவரை தேர்வு செய்யும் பணிகளையும் நாடாளுமன்றம் செய்கிறது

44. அ)

- சார்க் அமைப்பானது 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8 ஆம் தேதி டாக்கா நகரில் நிறுவப்பட்டது.
- சார்க் அமைப்பு இந்தியாவை மையமாகவும் அதனைச் சுற்றி 7 நாடுகளான இந்தியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், நேபாளம், பூடான் பங்களாதேஷ், மாலத்தீவு மற்றும் இலங்கையைக் கொண்டுள்ளது.
- இந்த அமைப்பு தெற்காசியா பகுதிகளில் வளர்ந்து கொண்டிருக்கும் பொருளாதார நிலைமைகளில் தடையில்லா வர்த்தக பகுதிகளை உருவாக்கிக் கொண்டது.
- இந்தியா தெற்காசியா நாடுகளுக்கிடையே கூட்டு சுய நம்பிக்கையை வளர்க்கின்றது.
- இந்தியா பிற சார்க் நாடுகளுடன் செயலாக்கமிக்க கூட்டு இணையை வளர்த்தது.
- இந்தியா பிற சார்க் நாடுகளுடைய பொருளாதார சமூக கலாச்சார அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் தளத்தில் பரஸ்பர உதவிகளை செய்கின்றது.

44. ஆ)

- இந்தியாவில் மாவட்ட நீதிமன்றங்கள், உயர்நீதி மன்றங்கள் மற்றும் உச்ச நீதி மன்றம் என மூன்று அடுக்கு நீதித்துறை அமைப்பு உள்ளது.
- உச்ச நீதிமன்றமே அரசமைப்பின் காவலன் ஆகும்.
- அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல், அடிப்படை உரிமைகள் அமலாக்கம் மற்றும் அனைத்து இந்திய மக்களின் பாதுகாவலனாக உச்சநீதி மன்றம் உள்ளது.
- உச்சநீதி மன்றம் மூன்று விதமான அதிகார வரம்புகளையும் ஐந்து நீதி பேராணைகளும் உள்ளது.
- நீதித்துறை சீராய்வு இந்திய நீதித்துறையின் மிகவும் குறிப்பிடத்தக்கது.
- இந்திய நீதித்துறையானது, அரசின் ஒரு அங்கம்.
- இந்தியாவில் சட்டத்தின் ஆட்சி செயல்படுவதால் நீதித்துறை முறைகேடுகளை குறைக்கின்றது.

45. அ)

- அரசமைப்பு 74 வது உறுப்பின் படி குடியரசுத் தலைவருக்கு உதவவும், ஆலாசனை வழங்கவும் பிரதம அமைச்சரைத் தலைவராக கொண்ட ஓர் அமைச்சர்கள் குழு இருக்கும்.
- குடியரசுத் தலைவர் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் இந்த அமைச்சர்கள் குழுவின் ஆலோசனைப் படி நடந்துக் கொள்வார்கள்.
- அமைச்சர்கள் குழுவின் ஆலோசனையை குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொள்கிறார்.
- அமைச்சர்கள் குழுவில் மூன்று வகையான அமைச்சர்கள் இருப்பர்.
    1) காபினட் அமைச்சர்கள்
    2) அமைச்சர்கள்
    3) துணை அமைச்சர்கள்
- காபினட் அமைச்சர்கள் கொள்கை முடிவுகளை எடுப்பதில் ஈடுபடுவார்கள்.
- மற்ற இரு பிரிவு அமைச்சர்களும் நிர்வாகப் பொறுப்புகளை மேற்கொள்வார்கள்.

45. ஆ)

- அரசமைப்பு வழியாக மத்திய–மாநில அரசாங்கங்கள் இடையே அதிகாரப்பகிர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதால் இந்தியா ஒரு கூட்டாட்சி அரசு என்கிறோம்.
- அதிகாரப் பகிர்வு மத்திய–மாநில உறவுகளின் அச்சாணி
- மத்திய–மாநில அரசுகளுக்கிடையே சட்டமன்ற அதிகாரப்பகிர்வு, ஆட்சித்துறை அதிகாரப் பகிர்வு, நிதி அதிகாரப் பகிர்வு என்று 3 முறைகளில் அதிகாரங்கள் பங்கிடப்பட்டுள்ளன.
- இந்தியக் கூட்டாட்சியை கூட்டுறவுக் கூட்டாட்சி என்று கிரான்வில் ஆஸ்டின் கூறியுள்ளார்.
- இந்தியாவின் கூட்டுறவுக் கூட்டாட்சியை வளர்க்க நிதி ஆயோக் என்ற குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

46.அ)

- உறுப்பு 79 ன் கீழ் இந்திய ஒன்றியத்தின் நாடாளுமன்றம் குடியரசுத் தலைவரும் ஈரவைகளும் உடையது.
- நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் உறுப்பினர்களின் மற்றும் மாநில–மத்திய ஆளுகைகளுக்குட்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- மாநிலங்களவை மேலவை, ராஜ்யசபா என்று அழைக்கப்படுகிறது.
- மாநிலங்களவை 250 உறுப்பினர்களைக் கொண்டது.
- இதில் 12 உறுப்பினர்களை குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.
- மீதமுள்ள 238 உறுப்பினர்கள் மாநிலங்கள் மற்றும் ஒன்றிய ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் சட்டமன்றங்கள் மூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.
- இவர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் ஆகும்.
- மக்களவை 545 உறுப்பினர்களைக் கொண்டது.
- மக்களவையின் தலைவர் சபாநாயகர் ஆவார்.
- மக்களவையின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

**46.ஆ) ஐ.நா.சபையின் அங்கங்கள்**

- பொதுச் சபை
- பாதுகாப்பு மன்றம்
- பொருளாதாரம் மற்றும் சமூக மன்றம்
- தர்மகர்த்தா அவை
- பன்னாட்டு நீதிமன்றம்
- செயலகம்.

**ஐ.நா.சபையின் நோக்கம்**

- இது ஓர் அரசுகளுக்கு இடையிலான அமைப்பாகும்
- தனது நோக்கமாக சர்வதேச அமைதி காப்பது
- சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பேணுவது.
- நாடுகளுக்கு இடையே நட்புறவு வளர்ப்பது.
- சர்வதேச ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது.
- நாடுகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கைக்கான மையமாக செயல்படுவதாகும்.

47.அ)

- மக்களவையின் பெரும்பான்மைக் கொண்ட கட்சியின் தலைவராக உள்ளார் பிரதமர்.
- மற்ற அமைச்சர்களை தேர்வு செய்யவோ பதவி நீக்கம் செய்யவோ குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்கிறார்
- அமைச்சர்களுக்கு பொறுப்புகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- அமைச்சரவை கூட்டங்களை கூட்டவும் தலைமை ஏற்று நடத்தவும் அதிகாரமுடையவர்.
- அரசின் கொள்கை முடிவுகளை ஒருங்கிணைப்பவராக பிரதமர் உள்ளார்.
- ஒரு பிரதமர் பதவி விலகினாலோ அல்லது இறந்துவிட்டாலோ அவரது அமைச்சரவையே இல்லாமல் போய்விடும்.
- அமைச்சர்களுக்கும் குடியரசுத் தலைவருக்கும் பிரதமர் பாலமாக திகழ்கிறார்.

47. ஆ)

- நதிநீர் பிரச்சனை பல இலட்சம் மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கின்றது.
- மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் சிக்கல்கள் சட்டம் நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்டது.
- நதிநீர் பிரச்சனையை தீர்ப்பதற்கு மத்திய அரசாங்கம் தீர்ப்பாயங்களை அமைக்கலாம் என்று இச்சட்டம் வழிவகுக்கின்றது.
- நதிநீர் பிரச்சனைகள் பேச்சு வார்த்தைகள் மூலமாக தீர்க்கப்பட வேண்டும்.
- பேச்சு வார்த்தை முயற்சி தோல்வி அடைந்தால் சம்மந்தப்பட்ட மாநிலங்கள் மத்திய அரசாங்கத்தை நாடலாம்
- மத்திய அரசாங்கம் குறிப்பிட்ட நதிநீர் பிரச்சனைகளைத் தீர்க்க ஒரு தீர்ப்பாயத்தை அமைத்து தீர்வை ஏற்படுத்தும்.